

பாடம் 5

ஏப்ரல் 27-மே 3

# எல்லா எதிர்நிலைகளிலும் விசுவாசம்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** சங் 119:162; யோவான் 16:13–15; 2பேதுரு 1:20,21; எபே 2:8,9; ரோமர் 3:23, 24; 6:15–18.

**மனன வசனம்:** நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன். சங்கீதம் 119:1.

புரொட்டஸ்டன்ட் சீர்திருத்தவாதிகளிடம் காணப்பட்ட ஒரு விஷயம் இருபத்தோராம் நூற்றாண்டு மக்களிடம் காணப்பட வேண்டியுள்ளது; அது, வாழ்க்கையில் ஒரு நோக்கத்தோடு வாழ்வதாகும். புகழ்பெற்ற அமெரிக்க உளவியலரான பிலிப் குஷ்மன், வெறுமையான வாழ்க்கை எனும் தன் புத்தகத்தில், நோக்கமற்ற வாழ்க்கை குறித்து விவாதித்திருக்கிறார். அப்படிப்பட்டவர்களுக்கு ஆழமான நம்பிக்கை இருக்காது. முக்கியமான விஷயங்களில் பற்று இருக்காது; சாகவும் தயாராக இருக்கிற அளவுக்கு எதுவும் முக்கியமானதாக இருக்காது; அதனால் அவர்கள் வாழ்க்கை பயனுள்ளதாக இருக்காது.

ஆனால் புரொட்டஸ்டன்ட் சீர்திருத்த மக்கள் முற்றிலும் வித்தியாசமாக இருந்தார்கள். வாழ்வதற்கு குறிப்பிட்ட நோக்கம் இருந்தது. தங்கள் நம்பிக்கையை மதித்தார்கள்; நேர்மையில் சமரசம் செய்யவில்லை. அடிப்படை நம்பிக்கைகளிலிருந்து அவர்களைப் முடியவில்லை. அந்த நம்பிக்கைகளைப் புறக்கணிப்பது தங்கள் அடையாளத்தையே புறக்கணிப்பதென உணர்ந்தார்கள். மரணத்தின் வாயிலும் உள்ளான சமாதானம் பெற்றிருந்தார்கள்.

இந்த வார ஆராய்ச்சியில், சீர்திருத்தக்கால உதாரணங்களுடன், வாழ்க்கையை மாற்றவல்ல வேதாகமப் போதனைகள் எவ்வாறு வாழ்க்கையின் மெய்யான நோக்கத்திற்கும் உண்மையான அர்த்தத்திற்கும் அடிப்படையாக இருக்கின்றன என்று பார்ப்போம். இந்த நித்திய சத்தியங்களைப் புரிந்துகொள்வது, நன்மைக்கும் தீமைக்கும் இடையே நடக்கிற மாபெரும் போராட்டத்தின் இறுதி நெருக்கடிக்கு நம்மை ஆயத்தப்படுத்தும். சீர்திருத்தவாதிகளின் யுத்தம் இன்னும் முடியவில்லை; அவர்கள் விட்ட இடத்திலிருந்து தொடர அழைக்கப்பட்டுள்ளோம். நம் வாழ்வின் சவால் எதுவாக இருந்தாலும் அவர் பெரியவர். நம் வாழ்க்கைக்கு மெய்யான அர்த்தத்தை, உலகம் தரக்கூடாத நோக்கத்தைக் கொடுக்கிறார்.

***மாபெரும் போராட்டம், 7-11ம் அதிகாரங்களின் அடிப்படையில் எழுதப்பட்ட இந்த வாரப் பாடம் 2024, மே 4 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்.***

# தேவனுடைய வார்த்தைமட்டுமே

**தேவ வார்த்தைகுறித்து தாவீதின் மனநிலை என்ன? சங் 119:103,104; சங் 119:147; சங் 119:162. அது சீர்திருத்தவாதிகளில் ஏற்படுத்திய தாக்கம் என்ன? இன்றும் நம் வாழ்க்கையில் எவ்வாறு தாக்கம் ஏற்படுத்துகிறது?**

சீர்திருத்தவாதிகளுடைய விசுவாசத்திற்கு அடிப்படையாகவும், அவர்களது போதனையின் சாராம்சமாகவும் வேதாகமம் இருந்தது. தங்கள் கையில் இருப்பது ‘என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனம்’ என்பதை அறிந்திருந்தார்கள். 1பேதுரு 1:23. ஒவ்வொரு வார்த்தையையும் பொக்கிஷமாகக் கருதினார்கள். ஒவ்வொரு பக்கமாக வாசித்து, அதன் வாக்குறுதிகளை விசுவாசித்தபோது, அவர்களது விசுவாசம் பெலப்பட்டது; புது தைரியம் கிடைத்தது. ‘தேவவார்த்தையின் எல்லா வாக்குறுதிகளும் அப்படியே இருக்கின்றன. அவற்றின்மூலம் அவர் நம் ஒவ்வொருவரோடும் பேசுகிறார்; அவரது சத்தம் நேரடியாக நம் காதில் விழுகிற வகையில் பேசுகிறார். இந்த வாக்குறுதிகளில்தாம் தேவன் தம் கிருபைபற்றியும், வல்லமைபற்றியும் நமக்குத் தெரிவித்திருக்கிறார். அவை “ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவான” மரத்தின் இலைகள்போல இருக்கின்றன. அவற்றை வாசித்து, உட்கொண்டால், குணத்தைச் சீரமைக்கின்றன; வாழ்க்கைக்கு ஊக்கமூட்டி, தாங்கி நடத்துகின்றன. வேறு எதற்கும் அதுபோன்ற குணமாக்கும் வல்லமை கிடையாது. வேறெதாலும் ஒட்டுமொத்த மனிதனுக்கும் தேவையான தைரியத்தையும் விசுவாசத்தையும் கொடுக்கமுடியாது’.

வேதாகமம் துக்கத்தில் மகிழ்ச்சியையும், அதைரியத்தில் நம்பிக்கையையும், இருளில் வெளிச்சத்தையும் பிரகாசிக்கச் செய்கிறது. குழப்பத்தில் வழிகாட்டுகிறது; செய்வதறியாத நிலையில் உறுதியளிக்கிறது; நம் பெலவீனத்தில் பெலப்படுத்துகிறது; அறியாமையில் ஞானத்தைக் கொடுக்கிறது. தேவவார்த்தையை நாம் தியானித்து, விசுவாசத்தோடு அதன் வாக்குறுதிகளை நம்பும்போது, ஜீவனைக் கொடுக்கிற தேவவல்லமை சரீர, மன, உணர்வு, ஆவிக்குரிய ரீதியாக நம்மை முற்றிலும் வலுப்பெறச் செய்கிறது.

சீர்திருத்தவாதிகள் மனதை வேதவாக்கியங்களால் நிரப்பினார்கள். தேவ வார்த்தையின்படி வாழ்ந்தார்கள்; அந்த வார்த்தைக்காக அநேகர் மரித்தார்கள். அக்கறையின்றி, மெத்தனமாக, ஏனோதானோ என்று, மேலோட்டமான பக்தியுள்ள கிறிஸ்தவர்களாக வாழவில்லை. தேவ வார்த்தையின் வல்லமையின்றி, தங்களை எதிர்த்து நிற்கும் தீயவல்லமைகளை தாங்கள் மேற்கொள்ள முடியாது என்பதை அறிந்திருந்தார்கள்.

சராசரி நபர்களும் வேதாகமத்தை வாசித்து, விளங்கிக்கொள்ளவேண்டும் என்பதற்காக வேதாகமத்தை ஆங்கில மொழியில் மொழிபெயர்ப்பதே ஜான் விக்ளிஃபின் ஒரே நோக்கமாக இருந்தது. ஆனால் அது சட்டத்திற்கு புறம்பாக இருந்ததால், அவரை விசாரித்தார்கள்; மதப்புரட்டரெனக் குற்றஞ்சாட்டி, மரண தண்டனை விதித்தார்கள். தான் விசாரிக்கப்படுகையில் விக்ஃளிப் பின்வருமாறு ஊக்கமாக வேண்டினார்: ‘நீங்கள் யாரிடம் போட்டிப்போடுவதாக நினைக்கிறீர்கள்? கல்லறையின் விளிம்பில் நிற்கிற ஒரு முதியவனிடமா? இல்லை! சத்தியத்துடன் – உங்களைவிட பெலம்வாய்ந்த, உங்களை மேற்கொள்ளுகிற சத்தியத்துடன்’.மரணத்தருவாயில் வைக்ளிஃப் சொன்ன வார்த்தைகள் நிறைவேறின; ஏனென்றால், தேவ சத்தியத்தின் ஒளி மத்தியக் காலத்தின் இருளை அகற்றியது.

**வேதவாக்கியங்கள் எந்தெந்த வழிகளில் சோதனை வேளைகளில் உங்களைத் தேற்றியிருக்கிறது?**

# சந்ததிகளுக்கும் தேவனுடைய வார்த்தை

**தேவ வார்த்தையை அறிவிப்பதில் தான் சந்தித்த சவால்களுக்கு மத்தியிலும், பவுலுக்கு இருந்த நம்பிக்கை என்ன? 2கொரி 4:1-6; 2கொரி 2:14.**

சுவிசேஷத்தைப் பரப்புகிற பணியில் பவுலுக்கு பல தடைகள் ஏற்பட்டன; ஆனாலும் தேவவார்த்தையே இறுதியில் வெற்றிபெறுமென நம்பிக்கையோடிருந்தார்; அதனால்தான் 'சத்தியத்திற்கு விரோதமாக நாங்கள் ஒன்றுஞ்செய்யக்கூடாமல், சத்தியத்திற்கு அநுகூலமாகவே செய்யக்கூடும்' என்றார். 2கொரி 13:8.

சீர்திருத்தவாதிகளும் அதேபோன்ற சோதனைகளை எதிர்கொண்டார்கள்; ஆனாலும் விசுவாசத்தால் தேவவார்த்தைக்கு உண்மையோடிருந்தார்கள். தடைகளின் மத்தியில் தைரியத்தோடு இருந்தவர்களில் வில்லியம் டிண்டேலும் ஒருவர். வேதாகமத்தை துல்லியமாக, வாசிக்க எளிதாக மொழிபெயர்க்க வேண்டும் என்பதே டிண்டேலின் மிகப்பெரிய ஆசை. வேதாகமத்தை மூலமொழியிலிருந்து மொழிபெயர்க்கவும், 140 வருடங்களுக்குமுன் விக்ளிஃப் மொழிபெயர்த்த பிரதியின் சில தவறுகளைத் திருத்தவும் உறுதியுடன் வேலைசெய்தார். இறுதியில், டிண்டேலையும் கைதுசெய்து, விசாரித்தார்கள். ஜெர்மனியின் வார்ம்ஸில் அச்சிடப்பட்ட அவரது மொழிபெயர்ப்புகள் பலவற்றைக் கைப்பற்றி, பொதுவிடத்தில் எரித்தார்கள். மதப்புரட்டர் என்று குற்றஞ்சாட்டி, எரிதண்டனை விதித்தார்கள். அவரை எரிகம்பத்தில் கயிற்றால் கட்டும்போதே, நெரித்துக்கொன்று, அவரது உடலை எரித்தார்கள். மரணத்தருவாயில், பலத்த சத்தமாக, வைராக்கியத்தோடு, 'ஆண்டவரே, இங்கிலாந்து மன்னரின் கண்களைத் திறந்தருளும்' என்று சொன்னார். தேவன் அற்புதவிதமாக டின்டேலின் ஜெபத்திற்குப் பதிலளித்தார்.

அவர் மரித்து நான்கு வருடங்களுக்குள், வேதாகமத்தின் நான்கு ஆங்கில மொழிபெயர்ப்புகள் வெளியிடப்பட்டன. 1611இல், வேதாகமத்தின் கிங் ஜேம்ஸ் பதிப்பு அச்சிடப்பட்டது; அது பெரும்பாலும் டிண்டேலின் மொழிபெயர்ப்பைத் தழுவி மொழிபெயர்க்கப்பட்டது. அப்பணியில் ஈடுபட்டிருந்த 54 மொழிபெயர்ப்பாளர்கள் டிண்டேலின் முந்தைய ஆங்கில மொழிபெயர்ப்பைத் தழுவியே மொழிபெயர்த்தார்கள். 1611இன், கிங் ஜேம்ஸ் வேதாகம மொழிபெயர்ப்பின் பழைய ஏற்பாட்டில் 76 சதவிதமும், புதிய ஏற்பாட்டில் 83 சதவிதமும் டிண்டேலின் மொழிபெயர்ப்பைத் தழுவி எழுதப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. 2011ம் வருடத்தில், கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பு வெளியிடப்பட்டு 400 வருடம் ஆனது; மேலும், 100 கோடி பிரதிகள் அச்சிடப்பட்ட சாதனையையும் நிகழ்த்தியது. கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பு உலகம் முழுவதிலும் லட்சக்கணக்கானோரின் வாழ்க்கையில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. வில்லியம் டின்டேலின் தியாகம் வீண்போகவில்லை.

சூழ்நிலைகள் கடினமாக இருந்தாலும், அவ்வாறு தோன்றினாலும், டிண்டேலும், வேதாகமத்தை நம்பிய அவரது சகபணியாளர்களும், தேவன் சகலத்தையும் தமது சித்தத்தின்படி நடத்துவதாக நம்பினார்கள். நித்தியத்திற்கேதுவான வித்தியாசத்தை டிண்டேலின் வாழ்க்கை உண்டுபண்ணியது.

---

**தானி 12:3; வெளி 14:13 ஆகிய வசனங்கள் டிண்டேலின் வாழ்க்கைக்கு எவ்வாறு பொருந்தக்கூடும்? உங்கள் வாழ்க்கைபற்றியும், அது மற்றவர்களில் ஏற்படுத்துகிற தாக்கம் பற்றியும் யோசியுங்கள். மற்றவர்களில் நித்தியத்திற்கேதுவான மாற்றத்தை உண்டுபண்ண உங்களுக்குள்ள வாய்ப்புபற்றி இந்த வசனங்கள் கொடுக்கிற ஊக்கம் என்ன?**

# ஆவியானவரால் பிரகாசமடைதல்

ஒருமுறை ஒரு பல்கலைக்கழக நூலகத்தில் வாசித்துக்கொண்டிருந்தபோது, மார்ட்டின் லூதரின் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டது. வேதாகமத்தின் லத்தீன் மொழிபெயர்ப்பைப் பார்த்தார். அப்படியொரு புத்தகம் இருப்பதாக அதற்குமுன் அவருக்கு தெரியாது. மிகுந்த மகிழ்ச்சியோடு, ஒவ்வொரு அதிகாரமாக, ஒவ்வொரு வசனமாக வாசித்தார். தேவவார்த்தையின் தெளிவும் வல்லமையும் அவரை ஆச்சரியமூட்டின. வாசிக்கவாசிக்க, பரிசுத்த ஆவியானவர் அவரது மனதைப் பிரகாசமாக்கினார். பாரம்பரியத்தால் மறைக்கப்பட்டிருந்த சத்தியங்கள் அந்தப் பரிசுத்த பக்கங்களில் தெளிவானபோது, ஆவியானவருடைய வழிநடத்துதலை உணர்ந்தார். வேதாகமத்துடனான முதல் அனுபவம்பற்றி, 'ஓ, தேவன் இப்படியொரு புத்தகத்தை எனக்குச் சொந்தமாகத் தந்தால் நன்றாக இருக்குமே!' என்றார்.

**வேதவாக்கியங்களுக்கு விளக்கம்காண்கிற விதம்பற்றி பின்வரும் வசனங்கள் சொல்லுவது என்ன?**

**யோவான் 14:25, 26**________________________________________

**யோவான் 16:13-15**________________________________________

**2பேதுரு 1:20, 21**________________________________________

வேதாகம எழுத்தாளர்களை ஏவிய அதே பரிசுத்த ஆவியானவர்தாம் அவற்றை வாசிக்கும்போது நம்மை வழிநடத்துகிறார் என்பது இந்த வசனங்களிலிருந்து தெளிவாகிறது. அவரே தெய்வீக சத்தியத்தின் தெய்வீக வியாக்கியானர். கிறிஸ்தவர்களெனச் சொல்லிக்கொள்கிற பலர் இன்று, வேதாகமத்தில் உள்ள தேவதன்மைகளை முக்கியப்படுத்தாமல், மனித தன்மைகளை முக்கியப்படுத்துகிறார்கள். சாத்தானால் இனியும் வேதாகமத்தை நம்மிடமிருந்து மறைக்கமுடியாது என்பதால், வேதாகமத்தின் தேவ தன்மையை மறைத்து, அதை நல்ல இலக்கியப் புத்தகம்போல் காட்டுகிறான்; இதிலும் மோசமாக, மக்களைக் கட்டுப்படுத்த சட்டைப்போலக் காட்டுகிறான்.

ஆசாரியர்களும் குருமார்களும் போப்புகளும் அல்ல, ஆவியானவர்மட்டுமே வேத வாக்கியங்களின் பிழைசொல்லாத வியாக்கியானர் என்பதை சீர்திருத்தவாதிகள் தெளிவாகக் கண்டார்கள். ஸ்காட்லாந்து சீர்திருத்தவாதியான ஜான் நாக்ஸுக்கும், ஸ்காட்லாந்து ராணியான மேரிக்கும் இடையே நடந்த உரையாடல் சுவாரசியமானவை: 'மேரி அரசி, ''வேத வாக்கியங்களுக்கு நீங்கள் ஒருவிதமாக விளக்கம் கொடுக்கிறீர்கள் அவர்கள் (ரோமன் கத்தோலிக்க ஆசிரியர்கள்) வேறொரு விதமாக விளக்கம் கொடுக்கிறார்கள்; நான் யாரை நம்புவது? யார் நீதிபதியாக இருப்பது?'' என்று கேட்டாள். ''தமது வார்த்தையின்மூலமாகத் தெளிவாகப் பேசும் தேவனை நீங்கள் நம்பலாம். அந்த வசனம் போதிப்பதற்கு அதிகமாக நீங்கள் ஒருவரையோ, மற்றவரையோ நம்பவேண்டியதில்லை. தேவவார்த்தை தன்னில்தானே தெளிவுள்ளது; ஓரிடத்தில் அவை விளங்கக் கடினமாகத் தெரிந்தால், தமக்குள் எந்த மாறுபாடும் இல்லாத ஆவியானவர், வேறிடங்களில் அதை தெளிவாக விளக்குகிறார்; எனவே பிடிவாதமாக அறியாமையில் இருப்பவர்கள் தவிர வேறெவருக்கும் அவற்றில் சந்தேகம் எழாது'' என்று சீர்திருத்தவாதி பதிலளித்தார்.'

# கிறிஸ்துமட்டுமே, கிருபைமட்டுமே

**இரட்சிப்பின் திட்டம்பற்றி எபே 2:8,9; ரோமர் 3:23,24; ரோமர் 6:23; ரோமர் 5:8-10 போதிப்பது என்ன?**

இரட்சிப்பை தேவன் ஓர் ஈவாகக் கொடுத்திருக்கிறார். கிறிஸ்து தம் சிலுவை மரணத்தின்மூலம் நமக்கு இலவசமாகக் கொடுத்திருப்பதை விசுவாசத்தால் நாம் ஏற்றுக்கொள்ளுமாறு ஆவியானவர் நம்மை நடத்துகிறார். தேவனுடைய குமாரனாகிய இயேசு, நம் பாவங்களை நிவிர்த்திசெய்ய தம் பரிபூரண ஜீவனைப் பலியாகத் தந்தார்.

தேவனுடைய நீதி, பரிபூரண கீழ்ப்படிதலைக் கோருகிறது. நம் பூரணமற்ற வாழ்க்கைக்குப் பதிலாக கிறிஸ்துவின் பூரணமான வாழ்க்கை நிற்கிறது. நாம் மீறிவிட்ட தெய்வீகப் பிரமாணம், நாம் மரணத்திற்கு பாத்திரர் என்கிறது. வேதாகமம் அதை உறுதிப்படுத்துகிறது. பாவத்தீர்மானங்களால், நம் வாழ்க்கைகுறித்த தேவனுடைய பூரண நோக்கத்தை நிறைவேற்ற 'தவறினோம்'. நாம் பாவம் செய்தோம். தேவனுடைய நீதியும் நியாயமுமான கோரிக்கைகளை நம்மால் நாமே நிறைவேற்றமுடியாது. அதன்விளைவாக, நித்திய மரணத்திற்கு உள்ளாகியிருக்கிறோம். ஆனால் நற்செய்தி இருக்கிறது. ரோமர் 6:23 ரோமர் 6:23ஐ வாசியுங்கள். அது ஓர் ஈவு; தகுதியற்றவர்களுக்குக் கொடுக்கப்படுவது. அது கிரியைகளால் கிடைத்தால், அதைச் சம்பாதித்திருக்க முடியும்; சுவிசேஷம் சொல்லுகிற ஒரு முக்கியச் செய்தி, நாம் இரட்சிப்பைச் சம்பாதிக்க முடியாது என்பதுதான்.

கிறிஸ்து, கிறிஸ்துமட்டுமே தங்கள் இரட்சிப்பிற்கான ஆதாரம் என்பதை மார்ட்டின்லூதரும்புரொட்டஸ்டன்ட்சீர்திருத்தவாதிகளும்கண்டுகொண்டார்கள். அதன்பிறகுதான் லூதர், கிறிஸ்துவின் இரட்சண்ய கிருபைகுறித்த செய்தியைப் பிரசங்கிக்க ஆரம்பித்தார். மனதைத் தொட்ட, வாழ்க்கையை மாற்றின அவரது செய்தியைக் கேட்க மக்கள் திரண்டுவந்தார்கள். பாலைவனம் போன்ற வாழ்க்கையில், குளிர்ச்சியான தண்ணீர்போன்று அவரது வார்த்தைகள் இருந்தன. மத்தியக்காலச் சபையின் பாரம்பரியம் எனும் சங்கிலியால் மக்கள் கட்டப்பட்டிருந்தார்கள்; ஆவிக்குரிய வாழ்விற்கு பிரயோஜனமற்றதும், நூற்றாண்டுகள் நெடுகிலும் நிலவியதுமான பாரம்பரியங்களில் மக்கள் அடிமைப்பட்டிருந்தார்கள். லூதரின் வேதாகமச் செய்திகள் இருதயங்களைத் தொட்டு, வாழ்க்கையை மாற்றின.

புதிய ஏற்பாட்டை வாசித்தபோது, அதில் தேவனுடைய நற்குணம்பற்றி லூதர் கண்டுகொண்டார். மனுக்குலம் முழுவதையும் இரட்சிக்க தேவன் விரும்புவதை அறிந்து ஆச்சரியமடைந்தார். அக்காலத்தில் சபைத்தலைவர்கள், இரட்சிப்பானது பாதி மனிதர்களின்வேலையாலும், பாதி தேவனுடைய வேலையாலும் கிடைப்பதாகப் போதித்துவந்தார்கள். கிறிஸ்துவின் சிலுவை மரணம் எல்லா மனிதர்களுக்கும் போதுமானது என்பதை லூதர் கண்டுகொண்டார்.

'கிறிஸ்து நடத்தப்பட வேண்டிய விதத்தில் நாம் நடத்தப்படும்படிக்கு, நாம் நடத்தப்பட வேண்டிய விதத்தில் கிறிஸ்து நடத்தப்பட்டார். நமக்குக் கொஞ்சமும் பங்கில்லாத அவரது நீதியால் நாம் நீதிமான்களாக்கப்படும்படிக்கு, அவருக்குக் கொஞ்சமும் பங்கில்லாத நம்முடைய பாவங்களுக்காக அவர் குற்றவாளியாகத் தீர்க்கப்பட்டார். அவருக்குச் சொந்தமான ஜீவனை நாம் பெறும்படிக்கு, நமக்குச் சொந்தமான மரணத்தை அவர் ஏற்றுக்கொண்டார்'

---

**கிறிஸ்துவில் தேவன் செய்கிற கிரியைதாம் இரட்சிப்பு என்றால், கிறிஸ்தவ வாழ்க்கையில் நம்முடைய நற்கிரியை என்ன பங்காற்றுகிறது? நம் அனுபவத்தில் நம் நற்கிரியைகளை நம் விசுவாசத்தின் அடிப்படையாகக் கருதாமல், அவற்றின் முக்கியத்துவத்தை எவ்வாறு உணரலாம்?**

# கீழ்ப்படிதல்: விசுவாசத்தின் கனி

**கிறிஸ்துவின் நீதியினால்மட்டுமே வருகிற இரட்சிப்புபற்றி ரோமர் 3:27-31; 6:15-18; 8:1,2 என்ன சொல்கின்றன?**

லூதரின் நாட்களில் கிறிஸ்தவச் சபைக்குள் ஒரு புதிய காற்று வீசிக்கொண்டிருந்தது. மக்களிடம், பாவிகளான தங்களைப் பார்க்காமல், இயேசுவை நோக்கிப்பார்க்குமாறு போதித்தார்கள். மக்கள் தங்களைப் பார்த்து, தாங்கள் இதுவரை இருந்த நிலையை யோசித்தபோது, அதைரியமடைந்தார்கள். இன்று இதேபோன்ற அனுபவம் ஏற்படாத விசுவாசி யாராவது இருக்கமுடியுமா? அதனால்தான் நாம் இயேசுவைநோக்கிப் பார்க்கவேண்டும்.

தேவகிருபை நம்மை மாற்றுகிறது. ஒருநாள், லண்டனில் மொராவியன் மக்களின் கூட்டத்தில் வெஸ்லி கலந்துகொண்டார். ரோமர் புத்தகத்திற்கு லூதர் எழுதின முன்னுரையை வாசித்தார்கள்; அதை ஆச்சரியத்தோடு வெஸ்லி கேட்டார். வாழ்க்கையில் முதல்முறையாக, சுவிசேஷத்தைப் புரிந்துகொள்ளத் தொடங்கினார். அவர் உள்ளம் தூண்டப்பட்டது; தனக்காக தம் ஜீவனையே கொடுத்த கிறிஸ்துவிடம் அவரை அறியாமலேயே இழுக்கப்பட்டார். அதுபற்றி, ‘‘இரட்சிப்புக்காக கிறிஸ்துவில், கிறிஸ்துவில்மட்டுமே நம்பிக்கை உடையவனாக மாறியதை உணர்ந்தேன்; அவர் என் பாவங்களை அகற்றினார், என் பாவங்களையே அகற்றினார், பாவத்திலும் மரணத்திலுமிருந்து என்னை இரட்சித்தார் என்கிற நிச்சயம் எனக்குக் கொடுக்கப்பட்டது’’ என்று ஆச்சரியத்தோடு கூறினார்.

**கிறிஸ்தவ வாழ்க்கைபற்றி 1பேதுரு 2:2; 2பேதுரு 3:18; கொலோ 1:10; எபே 4:18-24 வெளிப்படுத்துகிற முக்கிய உண்மைகள் என்ன?**

சீர்திருத்தவாதிகள் வேதாகமத்தை முறைப்படி ஆராய்ந்து, அதிக சத்தியத்தைக் கண்டுகொண்டார்கள். இருந்த நிலையிலேயே இருப்பதிலும், வளர்ச்சியே இல்லாத அல்லது சொற்ப வளர்ச்சியுள்ள ஆவிக்குரிய அனுபவத்திலேயே இருப்பதிலும் திருப்தியடையாமல், கிறிஸ்துவை நன்கு அறிந்துகொள்ள தொடர்ந்து முயன்று வந்தார்கள். வேதாகமத்தை நம்பின மத்தியக்கால கிறிஸ்தவர்கள் பலர், தங்கள் அர்ப்பணிப்பின்நிமித்தம் மிகப்பெரிய விலையைச் செலுத்தவேண்டியிருந்தது. சித்திரவதை, சிறைவாசம், நாடுகடத்தல், மரணதண்டனை ஆகியவற்றை அனுபவித்தார்கள். அவர்களது சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டன; வீடுகள் எரிக்கப்பட்டன; நிலங்கள் பிடுங்கப்பட்டன; குடும்பங்கள் உபத்திரவப்படுத்தப்பட்டன. அவர்கள் தங்கள் வீடுகளிலிருந்து விரட்டியடிக்கப்பட்டபோது, ‘தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு’ காத்திருந்தார்கள். எபி 11:10. சித்திரவதை அனுபவித்தபோது, சித்திரவதைப்படுத்தினவர்களை ஆசீர்வதித்தார்கள்; இருட்டிலும் ஈரமான நிலவறைகளிலும் பாடனுபவித்தபோது, பிரகாசமான எதிர்காலம்குறித்த தேவ வாக்குறுதியைப் பற்றிக்கொண்டார்கள். அவர்களது சரீரங்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தாலும், அவர்கள் விடுதலை பெற்றவர்களாக இருந்தார்கள். அதாவது, கிறிஸ்துவிலும், அவரது வார்த்தையின் சத்தியங்களிலும், அவரது சீக்கிர வருகை குறித்த நம்பிக்கையிலும் விடுதலை பெற்றிருந்தார்கள்.

---

**இரட்சிப்புகுறித்த என்ன நம்பிக்கையைப் பெற்றிருக்கிறீர்கள்?**

# மேலும் படிக்க:

‘தேவனுடைய உண்மை ஊழியர்கள் தனியாகப் பிரயாசப்படவில்லை. துரைத்தனங்களும் வல்லமைகளும் வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளும் அவர்களுக்கு எதிராக அணிவகுத்தபோதும், கர்த்தர் தம் மக்களைக் கைவிடவில்லை. அவர்களது கண்கள் திறக்கப்பட்டிருந்தால், முற்காலத்தின் ஒரு தீர்க்கதரிசிக்கு அருளப்பட்டதுபோன்ற தெய்வீக பிரசன்னத்தின் தெளிவான அடையாளமும், தெய்வீக உதவியும் தங்களுக்கும் அருளப்பட்டதைக் கண்டிருப்பார்கள். தங்களைச் சுற்றிலும் எதிரிகளின் சேனை இருந்ததையும், தாங்கள் தப்பிக்க வழியே இல்லாதிருந்ததையும் எலிசாவின் வேலைக்காரன் தன் எஜமானிடம் சுட்டிக்காட்டியபோது, ‘கர்த்தாவே, இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும்’ என்று தீர்க்கதரிசி ஜெபித்தார். 2இராஜா 6:17. மலையைச் சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளும் இரதங்களும் நிறைந்திருந்தன; தேவமனிதனைப் பாதுகாக்க பரலோகத்தின் சேனை நிறுத்தப்பட்டிருந்தது. சீர்திருத்தப்பணியில் இருந்த ஊழியக்காரர்களை அவ்வாறே தேவதூதர்கள் பாதுகாத்தார்கள்.’

‘சீர்திருத்த விசுவாசத்தைக் கவிழ்க்க, சக்திவாய்ந்த எதிரிகள் ஒன்றுசேர்ந்தபோது, அதற்கு எதிராக ஆயிரக்கணக்கான பட்டயங்கள் உருவப்பட்ட நிலை காணப்பட்டபோது, லூதர் பின்வருமாறு எழுதினார்: ‘சாத்தான் கோபத்தோடு செயல்படுகிறான்; பக்தியற்ற போப்புமார்கள் சதிசெய்கிறார்கள்; நம்மேல் போர்தொடுப்பதாக அச்சுறுத்துகிறார்கள். ஆவியானவர் நமது எதிரிகளை மேற்கொள்ளவேண்டும்; சமாதானமாகப் போகும்படி அவர்களை நெருக்கவேண்டும். அவ்வாறு நடக்கவேண்டுமென்று, ஜெபத்தாலும் விசுவாசத்தாலும் ஆண்டவருடைய சிங்காசனத்திற்கு முன்பாக ஊக்கமாகப் போராடுமாறு மக்களிடம் சொல்லுங்கள். ஜெபமே நம் முக்கியத் தேவை; நம் முக்கியப் பணி. இப்போது பட்டயத்தின் நுனிக்கும், சாத்தானின் கோபத்திற்கும் தாங்கள் ஆளாகியிருப்பதை மக்கள் உணர்ந்து, ஜெபிக்கட்டும்.’

‘விசுவாசத்தால் நீதிமானாகுதல்’ என்று லூதர் புதிதாகக் கண்டுகொண்ட மாபெரும் சத்தியம்தான் சுவிசேஷத்தின் அடிப்படையாக இருக்கிறது; அந்தச் சத்தியத்தில்தான் நம் இரட்சிப்புக்கான நம்பிக்கை உள்ளது. ‘கர்த்தர்தான் எங்கள் துர்க்கமும்’ எனும் பாடல் சுவிசேஷம்பற்றி வல்லமையாகச் சொல்கிறது: ‘எதற்கு நாங்கள் வல்லவர்? இந்நீசர் சக்தியற்றோர்; எங்களுக்காய் வேறொருவர் போர் செய்வதற்கேற்பட்டோர் யார்? இயேசுக் கிறிஸ்துதான்! ஆ, இந்தப் பலவான் எங்களின் ரட்சகர், சேனாபதி அவர், ஜெயிப்பார் அவர்தாமே.’

---

### கலந்துரையாடக் கேள்விகள்

**1** *கிருபையும் நியாயப்பிரமாணமும், விசுவாசமும் நற்கிரியைகளும் ஆகியவற்றில் எவ்வாறு ஒரு சமநிலைபோக்கைக் கடைப்பிடிக்கலாம்?*

**2** *நம் மனது கிரியைத்துவத்திற்கு நேராகச் செல்லுவது ஏன் எளிது? கிரியைத்துவம் என்றால் என்ன? அது நம் கிறிஸ்தவ விசுவாசத்திற்கு ஏன் கேடானது?*

**3** *‘கிருபையினால் இரட்சிப்பு’ என்கிற கருத்தை சரியாகப் புரிந்துகொள்ளாவிட்டால் ஆபத்துகள் உண்டா? அந்தத் தவறானப் புரிதல் எங்கே வழிநடத்தக்கூடும்?*

**3** *‘மலிவான கிருபை’ என்றால் என்ன அர்த்தம்? கிருபை எப்போதாவது இருக்கமுடியுமா?*

# செல்வந்தர்கள், பிரபலமானவர்களுக்கு கடிதங்கள்

**ரெபெக்கா ரூயிஸ் லகுவார்டியா**

ஸ்பெயினைச் சேர்ந்த இல்லத்தரசி ஒருவர் ஸ்பெயினின் அரசக்குடும்பத்தினர், நடிகர்கள், பாடகர்கள், முன்னாள் கியூப அதிபர் ஃபிடல் கேஸ்ட்ரோ ஆகியோருக்கு இயேசுவின் வருகையை அறிவிக்கும்படிக்கு 35 வருடங்கள் கடித ஊழியம் செய்தார்; அதைச் செய்யத் தூண்டியது ஒரு வாக்கியமாகும்.

அவர் என்னுடைய அம்மா; அவரது பெயர் பிலர் லக்வார்டியா; நற்செய்தி ஊழியர்; அவரைத் தூண்டிய வாக்கியம் இதுதான்: 'வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஆண்கள், நம்பிக்கை மிக்க பதவிகளில் இருப்பவர்கள், விஞ்ஞான நுணுக்கம் உள்ளவர்கள், மேதைகள், இக்காலத்திற்கான விசேஷித்த சத்தியங்களை அறியாத நிலையில் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பவர்கள் ஆகியோர்தான் முதலாவது அழைப்பைப் பெறவேண்டியவர்கள். அவர்களுக்கு அழைப்பு கொடுக்கப்படவேண்டும்'. COL, p 230.

அதை வாசித்ததும், 'ஒரு சாதாரண இல்லத்தரசியாகிய நான் எவ்வாறு அந்த நபர்களை அணுகமுடியும்' என்று யோசித்தார். சிறிது நேரத்திலேயே ஒரு திட்டம் உருவானது. முக்கிய நபர்களின் நேர்முகப்பேட்டிகளை தொலைக்காட்சி மற்றும் வானொலியில் பார்க்க வேண்டும்; செய்தித்தாள்கள் மற்றும் பத்திரிக்கைகளில் வாசிக்கவேண்டும் என்று தீர்மானித்தார். அவர்களுக்கு ஆவிக்குரிய விஷயங்களில் ஈடுபாடு இருப்பதற்கான ஏதேனும் குறிப்புக் கிடைத்தால், அவர்களை தேவனிடம் அறிமுகப்படுத்த முடியும்.

அம்மாவுக்கு பல வாய்ப்புகள் கிடைத்தன. "எனக்கு விசுவாசம் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்" அல்லது "நான் அஞ்ஞானவாதி" அல்லது "எனக்குள்ளாக வெறுமை காணப்படுகிறது" போன்று யாராவது பேசினால், அவருக்கு உடனே ஒரு கடிதம் எழுதுவார். ஸ்பெயினின் ஜனாதிபதிகள், மந்திரிகள், பேராயர்கள், பாதிரியார்கள், நடிகர்கள், பாடகர்கள், ஆசிரியர்கள், பத்திரிக்கையாளர்கள், சிறைக்கைதிகள் ஆகியோருக்கு என் அம்மா எழுதியிருக்கிற கடிதங்களை எண்ணமுடியாது. ஃபிடல் கேஸ்ட்ரோ போக, ஸ்பெயின் மன்னரான ஆராம் ஃபெலிப், ராணியான லெடிசியா, இத்தாலியின் பிரபல பாடகர் அல் பேனோ கேர்ரிஸி, ஆசிரியர்களான பாலோ கோஹெலோ மற்றும் ஜோஸ் ஸரமங்கோ ஆகியோருக்கு கடிதம் எழுதியிருக்கிறார்.

பலர் பதிலளித்திருக்கிறார்கள். மேட்ரிட் நகரத்தின் மேயர் 'நான் போராட்ட வரிசை புத்தகங்களை வாசித்துக் கொண்டிருக்கிறேன்; மாபெரும் போராட்டம் புத்தகத்தில் "ஸ்பெயினில் எழுப்புதல்" என்கிற அதிகாரத்தை வாசித்துக் கொண்டிருக்கிறேன்' என்று பதில் எழுதினார். கிறிஸ்துவிடம் செல்லும் வழி மற்றும் யுகங்களின் போராட்டம் புத்தகங்களுக்காக நன்றிசொல்லி ஒரு பேராயர், 'நமக்கு வெளிச்சத்தைக் கொண்டுவருதற்கு தெய்வீக இரக்கம் அருள் புரியட்டும்' என்று எழுதியிருந்தார். வேறொரு பேராயர், 'நான் வேதாகமத்தை நன்கு ஆராயவும், தேவனுக்கு சிறப்பாக ஊழியம் செய்யவும் விரும்புகிறேன். என்னுடைய வேதாகமப் புரிதல்களில் சிலவற்றை மாற்றவேண்டியுள்ளது' என்று எழுதினார்.

மருத்துவப் பணியிலிருந்து விலகி, கன்னியாஸ்திரியாகச் சென்ற இஸபெல் என்கிற பெண், பல மாதங்களாக தொலைபேசி மற்றும் கடிதம் மூலம் என் அம்மாவோடு தொடர்பில் இருந்தார்.